**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC . No. 60/2026**

**PW - 1**

| | | |
|---|---|---|
| Name | : | நித்யா ( LW. 1 ) |
| Father's / Husband Name | : | க/பெ. பூபதிராஜா |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.05.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது மாணிக்கம்பாளையம், அண்ணாநகர், கூத்தம்பூண்டி, நாமக்கல்லில் குடியிருந்து குருபவன் உணவகத்தில் காசாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது ஊரைச்சேர்ந்தவர். கடந்த 11.12.2025 ம் தேதி காலை 09.00 மணியளவில் நானும், எனது கணவரும் எனது மகளை அவர் படித்து வரும் மாணிக்கம்பாளையம் அரசு பள்ளிக்கு அழைத்து சென்று விட்டுவிட்டு பின்னர் எனது கணவர் இருசக்கர வாகனத்தை எடுக்க முற்பட்டபோது ஆஜர் எதிரி எங்கள் வண்டியை மறித்து எனது கணவரை தேவடியா பயலே, உருப்படமாட்ட என்று கேட்டார். நான் அப்போது ஏன் இவ்வாறு கெட்ட வார்த்தை பேசுகிறீர்கள் என்று கேட்டபோது நீ வாய மூடுடி, தேவடியா உன்னாலதாண்டி எல்லா பிரச்சனையும் என்று என்னையும் கெட்ட வார்த்தையால் திட்டினார். இரண்டு நாள் தான் உங்களுக்கு டைம் அதற்குள் உங்கள் வீட்டை எனது பெயரில் எழுதிவைக்கவில்லை என்றால் உங்களை கொன்று விடுவேன் என்று மிரட்டினார். பின்னர் நாங்கள் வேலைக்கு செல்ல நேரமானதால் மேற்படி எங்களது இருசக்கர வாகனத்தில் வந்துவிட்டோம். பின்னர் 13.12.2025 ம் தேதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) புகார் முகவரியில் நாங்கள் 13 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறோம். மேற்படி வீட்டின் அடிநிலமானது ஆரம்பத்தில் எதிரியின் மனைவி பெயரில் பட்டா கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. எனது பெயரில் மேற்படி இடத்திற்கு 2025 ல் பட்டா கொடுக்கப்பட்டது. அதாவது இந்த புகார் கொடுக்கப்பட்ட காலக்கட்டத்தில் என்றால் சரி. எனக்கு பட்டா கொடுப்பதற்கு முன்னர் மேற்படி நிலத்திற்கான பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் யார் பெயரிலும் இல்லை. நாங்கள் குடியிருக்கும் வீடானது எப்போது, யாரால் கட்டப்பட்டது என்றால் நாங்கள் சுமார் 9 வருடங்களுக்கு முன்பு மேற்படி வீட்டினை கட்டினோம். மேற்படி வீட்டை நாங்கள் கட்டும் போது எனக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் சுமார் 27 வயது இருக்கும். தற்போது எனக்கு 32 வயதாகிறது. மேற்படி நாங்கள் குடியிருக்கும் வீட்டின் அடிநிலமானது ஆரம்பத்தில் எதிரியின் மனைவி பெயரில் பட்டா கொடுக்கப்பட்டிருந்தது என்றும், அதில் எதிரி தான் வீட்டை கட்டினார் என்றும் நானும், எனது கணவரும் மேற்படி வீட்டில் 2021 ம் ஆண்டு குடிபுகுந்தோம் என்றும், பின்னர் நாங்கள் குடிவந்த பிறகு வருவாய் துறையினரை ஏமாற்றி எங்கள் பெயரில் பட்டா பெற்றுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு 2011 ம் ஆண்டு திருமணம் ஆனது.

3) மேற்படி அரசு மேல்நிலைப்பள்ளிக்கு வடபுறம் தான் முன்வாசல் உள்ளது என்றால் சரி. சம்பவத்தின் போது நான் எங்கிருந்தேன் என்றால் பள்ளியின் சுற்றுசுவருக்கு வெளியே இருந்தேன். சம்பவத்தன் போது எதிரி தனது இரண்டு மாடுகளை கால்நடை மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது அரசு மேல்நிலைப்பள்ளி பின்புறமாக சென்றபோது அவருக்கு பின்னர் இருசக்கர வாகனத்தில் நானும், எனது கணவரும் வந்து எதிரியை கெட்ட வார்த்தையால் திட்டி அடித்து கீழே தள்ளி கொலை மிரட்டல் விடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் குறித்து எதிரி காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் என் மீதும், எனது கணவர் மீதும் குற்ற எண்.168/2025 சட்டப்பிரிவு 296(b), 115(2), 351(2) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. எதிரிதான் முதலில் புகார் கொடுத்தார் என்றும், மேற்படி எதிரியை நாங்கள் அடித்து காயப்படுத்திய வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிக்கு எதிராக பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

4) இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் எங்களை புகார் கொடுத்த அன்றே விசாரித்தார்கள். அதன் பின்னர் போலிசார் எங்களை விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் சொன்னபடி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

ஒம்/–S.தினேஷ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC . No. 60/2026**

**PW - 2**

| | | |
|---|---|---|
| Name | : | பூபதிராஜா ( LW. 2) |
| Father's / Husband Name | : | த/பெ. செல்வராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.05.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது மாணிக்கம்பாளையம், அண்ணாநகர், கூத்தம்பூண்டி, நாமக்கல்லில் குடியிருந்து ஊராட்சி துறையில் கணிணி ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரி எனது ஊரைச்சேர்ந்தவர். எங்கள் வீட்டிற்க நத்தம் பட்டா வாங்குவதற்காக எதிரி எங்களுக்கு உதவி செய்திருந்தார். மீண்டும் அவர் பெயரிலேயே மேற்படி இடத்தை எழுதி தரசொல்லி என்னை கேட்டபோது நான் மறுத்துவிட்டேன். இதனால் கடந்த 11.12.2025 ம் தேதி காலை 09.00 மணியளவில் நானும், எனது மனைவியும் எனது மகளை அவர் படித்து வரும் மாணிக்கம்பாளையம் அரசு பள்ளிக்கு அழைத்து சென்று விட்டுவிட்டு பின்னர் நான் எனது இருசக்கர வாகனத்தை எடுக்க முற்பட்டபோது ஆஜர் எதிரி எங்கள் வண்டியை மறித்து என்னை தேவடியா கையா, நீயெல்லாம் நல்லாவே இருக்க மாட்ட, உருப்படமாட்ட என்று திட்டினார். பின்னர் எனது மனைவி அவரிடம் எதுவும் பேசவேண்டாம் என்று சொன்னபோது உன்னால தாண்டி எல்லா பிரச்சனையும் என்று எனது மனைவியையும் ஜாதி பெயரை சொல்லி கெட்ட வார்த்தையால் திட்டினார். இன்னும் இரண்டு நாட்களுக்குள் உங்கள் வீட்டை எழுதிவைக்கவில்லை என்றால் ஆட்களை வைத்து உங்களை கொன்று விடுவேன் என்று மிரட்டினார். பின்னர் நாங்கள் வேலைக்கு செல்ல நேரமானதால் எங்களது இருசக்கர வாகனத்தில் வந்துவிட்டோம். பின்னர் எனது மனைவி 13.12.2025 ம் தேதி காவல்

நிலையம் சென்று புகார் கொடுத்தார். அன்றே போலீசார் என்னை எங்கள் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) புகார் முகவரியில் நாங்கள் 9 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறோம். மேற்படி வீட்டின் அடிநிலமானது ஆரம்பத்தில் எதிரியின் மனைவி பெயரில் பட்டா கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. எனது மனைவி பெயரில் மேற்படி இடத்திற்கு 2025 ல் பட்டா கொடுக்கப்பட்டது. அதாவது இந்த புகார் கொடுக்கப்பட்ட காலக்கட்டத்தில் என்றால் சரி. எனது மனைவி பெயருக்கு பட்டா கொடுப்பதற்கு முன்னர் மேற்படி நிலத்திற்கான பட்டா யார் பெயரில் இருந்ததது என்றால் யார் பெயரிலும் இல்லை. நாங்கள் குடியிருக்கும் வீடானது எப்போது யாரால் கட்டப்பட்டது என்றால் நானும், எனது மனைவியும் சுமார் 9 வருடங்களுக்கு முன்பு மேற்படி வீட்டினை கட்டினோம். மேற்படி வீட்டை நாங்கள் கட்டும் போது எனக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் சுமார் 24, 25 வயது இருக்கும்.

3) நாங்கள் வீடு கட்டியுள்ள புல எண் என்னவென்றால் கூத்தம்பூண்டி, நத்தம் சர்வே எண்.193/82,83 ஆகும். அதன் விஸ்தீர்ணம் 843 சதுரடியாகும். அரசாங்கத்தால் மேற்படி இரண்டு புல எண்களில் உள்ள இடத்திற்கு எனது மனைவி பெயரில் பட்டா கொடுக்கப்படவில்லை என்றும், மேற்படி நாங்கள் குடியிருக்கும் வீட்டின் அடிநிலமானது ஆரம்பத்தில் எதிரியின் மனைவி பெயரில் பட்டா கொடுக்கப்பட்டிருந்தது என்றும், அதில் எதிரி தான் வீட்டை கட்டினார் என்றும், நானும், எனது மனைவியும் மேற்படி வீட்டில் 2021 ம் ஆண்டு வாடகைக்கு குடிபுகுந்தோம் என்றும், பின்னர் நாங்கள் குடிவந்த பிறகு வருவாய் துறையினரை ஏமாற்றி எங்கள் பெயரில் பட்டா பெற்றுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல.

4) மேற்படி அரசு மேல்நிலைப்பள்ளிக்கு வடபுறம் தான் முன்வாசல் உள்ளது என்றால் சரி. சம்பவத்தின் போது நான் எங்கிருந்தேன் என்றால் எனது மகளை பள்ளியில் இறக்கி விட்டுவிட்டு பள்ளியின் சுற்றுசுவருக்கு வெளியே இருந்தேன். பள்ளி வளாகத்திற்குள் இருந்ததாக போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரி. சம்பவத்தன் போது எதிரி தனது இரண்டு மாடுகளை கால் நடை மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது அரசு மேல்நிலைப்பள்ளி பின்புறமாக சென்றபோது அவருக்கு பின்னர் இருசக்கர வாகனத்தில் நானும், எனது மனைவியும் வந்து எதிரியை கெட்ட வார்த்தையால் திட்டி அடித்து கீழே தள்ளி கொலை மிரட்டல் விடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் குறித்து எதிரி காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் என் மீதும், எனது மனைவி மீதும் குற்ற எண்.168/2025 சட்டப்பிரிவு 296(b), 115(2), 351(2) BNS ன் கீழ் வழக்கு பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. எதிரி தான் முதலில் புகார் கொடுத்தார் என்றும், மேற்படி எதிரியை நாங்கள் அடித்து காயப்படுத்திய வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிக்கு எதிராக பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

5) இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் எங்களை புகார் கொடுத்த அன்றே எனது வீட்டில் வைத்து என்னை விசாரித்தார்கள். அதன் பின்னர் போலிசார் எங்களை விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் சொன்னபடி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எனது மனைவி கொடுத்த பொய் புகாரினை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

ஒம்/–S.தினேஷ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.